**கமநல அபிவிருத்தி நிதியம் - 2017**

---

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்ததில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 97(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்ட விடயங்களுக்கு செம்மையாக்கல்கள் செய்யப்படுமாயிருந்தால் தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பல அடிப்படை அம்சங்களுக்கு பொருண்மையான தாக்கங்கள் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசெயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமம் 1 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்கள், செலவுகள், மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் ஏக்கர் வரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியமம் 9 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்களை மதிப்பீடு செய்யும் அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜப்பான் உதவி செயற்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள 140 நீர் பம்பிகள் மற்றும் 2464 உழவு இயந்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப் பணம் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் இல்லாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 181,163,484 நிலுவை கடன் தவணைப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய (அ) பந்தியில் காட்டப்பட்டுள்ள பற்றாக்குறைகளின் காரணமாக விவசாயிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கடன் தவணைப் பணம் நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளின் போதும் அவ்வாறு வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட கடன் தவணைப் பணங்களின் பெறுமதி ரூபா 20,296,143 மற்றும் ரூபா 17,159,610 ஆக இருந்ததுடன் அவ்வாண்டுகளில் மிகை அப் பெறுமதிகளால் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

நிதியத்தின் காசு மீதிக்கும் திறைசேரி ஏடுகளின் பிரகாரமான காசு மீதிக்குமிடையே 2008 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 651,798 வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமநல சேவைகள் நிலையம் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 02 சக்கர உழவு இயந்திரங்கள் இழுவைப் பெட்டிகள் மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் இழுவைப் பெட்டிகளுக்காக 07 ஆண்டுகளாக அறவிட வேண்டிய ரூபா 6,194,575 பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வண்ணாத்திவில்லு இளைய நாற் பயிர் ஆய்வு கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது நிதியத்தால் மீள அறவீடு செய்தல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 518,000 முற்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அது தொடர்ச்சியாக நிதிககூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டுவருகின்றது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் (ஆ) பிரிவின் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,507,861 கூட்டுமொத்தமான முற்பணங்கள் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 04 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 50,009,002 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 54,228,626 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 4,219,624 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உத்தரவுப் பத்திர வருமானம் ரூபா 2,374,781 ஆல் குறைவடைதல், ஏனைய பெறுவனவுகள் ரூபா 1,863,265 ஆல் குறைவடைதல் என்பன மேற்கூறிய நிதி விளைவகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 செயற்திறனும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் புதிய விவசாயக் கொள்கையை அமுல்ப்படுத்துவதற்காக ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 6,000,000 மற்றும் விவசாய வங்கிகளின் நிதி மற்றும் கடன் பதிவேடுகளின் பாதுகாப்புத் தன்மையை ஏற்படுத்துவதற்காக தேவையான உபகரணங்களை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் குறிக்கோள்களான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்காணப்பட்ட ரூபா 450,000 இருப்பு பற்றாக்குறைகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் அப்பணம் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகளை உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 30 சதவீதத்திலிருந்து 150 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.2 பெறுகைத் திட்டம்

2006 ஆம் ஆண்டிற்கான அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீட்டு கட்டுப்பாடு | இனங்காணப்படாது கணக்கு மீதிகளை நிதியத்திற்குச் செலவு வைத்தல். |
| (ஆ) | கடனை அறவீடு செய்தல் | 2010 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் கடன் தவணைப் பணங்களை அறவீடு செய்யாமை. |